[1980 ஜூலை 8]

தனுஷ்கோடிக்கு சாலைகள் அமைத்து, அந்த இடத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒப்பந்தம் போடப்பட்டு, கட்டப்படவேண்டிய பாலமே மூன்றில் ஒரு பங்கு வேலையோடு நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 54-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவார்.

உ. தகவல் கோரல்.

(அ) கேரள நதிநீர் பங்கீடு.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மேற்குப் பக்கமாக போகின்ற நதிகளின் நீரை தமிழகத்திற்குக் கொடுப் பதைப் பற்றி நேற்று கேரளாவில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி ஏதாவது பேசு கிறீர்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ள பிரச்சினையை முடித்து விட்டு, அடுத்த பிரச்சினைக்கு வரலாம்.

பேரவை விதி 54-இன் கீழ் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கள் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், கே. எம். தங்கமணி, இ. முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. மு. அம்பிகாபதி.

(ஆ) பேரவையில் ஒலிபெருக்கி வசதி.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னால் என்னுடைய முதல் வேண்டுகோளாக உங்களிடம் கொண்டு

வருவது, இங்கே 4 பேர்களுக்கு ஒரு மைக் தான் இருக்கிறது. நாங்கள் தாவித் தாவிப் பேச வேண்டி இருக்கிறது. அதனால் பேச முடியவில்லை. எனவே முன் வரிசையிலே உள்ளதைப் போல மைக் ஒரு வாரத்திற்குள் அரேன்ஜ் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அதற்கு அவை முன்னவர் பதில் சொல்வார்கள்.

3. கவன ஈர்ப்பு.

அ. திண்டிவனத்திற்கு அருகில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டிவனத்திற்கு அருகே 2—7—1980 அன்று ஏற்பட்ட லாரி விபத்தில் 14 பேர் இறந்தது'' பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். —

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—7—1980 அன்று இரவு டி.எம்.டி. 2354 என்ற லாரி ஒன்று 880 கிலோ எடையுள்ள குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களை (Cylinders) மதராஸ் கோதாரி தொழிற் கூடத்திலிருந்து மேட்டூர் மைகா தொழிலகத்திற்கு ஏற்றிக் கொண்டு சென்றது. லாரி ஓட்டுநர், தாம்பரத்தில் சேலம் மாவட்டத்திற்குச் செல்லும் பதினைந்து பிராணிகளையும் அந்த லாரியில் ஏற்றிக் கொண்டார். நள்ளிரவு சுமார் 12 மணிக்கு திண்டிவனத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோனே குப்பம் என்ற கிராமத்தின் அருகில் அந்த லாரி சென்றபோது அதன் வலது முன் சக்கரத்தின் டயர் வெடித்ததால் தீப்பற்றிக் கொண்டது. குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களும் லாரியிலிருந்து தரையில் உருண்டன. அவற்றுள் ஒரு கலத்திலிருந்து குளோரின் வாயு வெளி வந்து கொண்டிருந்தது. இவ்விபத்தின் விளைவாகவும், குளோரின் வாயுவின் தாக்குதலாலும் லாரி ஓட்டுநர் உட்பட 14 பேர் இறந்து விட்டனர். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த மூவரில் க்ளீனரும் ஆவார். காயம் அடைந்தவர்கள் திண்டிவனத்தில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் உட்பிரிவு பிணியாளராகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இவ்